---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அன்றுடன் முடிவுற்ற ஆண்டிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக் கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 107(5) துணைப் பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவு என்பவற்றின் கீழ விதிக்கப்பட்டுள்ள 1980 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மருத்துவ விஞ்ஞான பட்டப்பின் படிப்பு ஒழுங்குபடுத்தலின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 108(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 12 ஆவது பிரிவின் ஏற்பாடுளுக்கு அமைவாக எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிறுவகத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப்பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றவாறு இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்குஇணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவு பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.3 நிதிக் கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அந்த ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக் கூற்றுக்கள் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிலையத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு ஒன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு

வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிலையமானது கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிலையத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அந்த ஆளுகைக்குட்பட்டதரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) ஆம் துணைப் பிரிவின் பிரகாரம், நிலையத்தின் வருடாந்த மற்றும் கால ரீதியான நிதிக் கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு நிறுவனமானது அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வின் பொறுப்புக்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

முழுமையாக எடுத்துக் கொள்ளும் பட்சத்தில் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக் கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக் கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

என்னால் தொழில் தீர்ப்புக்கள் மற்றும் தொழில் ஐயப்பாட்டினையும் பேணும் வகையில் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டது. அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக் கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக் கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவே அன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக் கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானவாறும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பாக கவனம் செலுத்தும் போது நிலையத்தின் பணிகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக் கூடியவாறு அதன் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதும், அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- யாதேனுமொரு எழுத்து மூலமான சட்டம் அல்லது நிலையத்தின் பணிப்பாளர் சபையினால் வெளியிடப்பட்ட விசேட கட்டளை தொடர்பாக இணங்கியிருந்ததா என்பதும்,

- தமது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும்,

- வளங்கள் கால வரையறைகளின் உள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கு இணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

## 1.5 நிதிக் கூற்றுக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காமை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| குறித்த தரத்திற்கான குறிப்புடன் இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 01 இன் பந்தி இலக்கம். 70 இன் பிரகாரம் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் போது சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறை அல்லாச் சொத்துக்கள் என வகைப்படுத்தி குறிப்பிட வேண்டியுள்ள போதிலும் 05 ஆண்டுகளுக்கு மேற்படி நிலவி வந்த மொத்தக் கூட்டுத்தொகை ரூ. 265,500 பெறுமதியான வழங்கல் சேவைகளுக்காக வைக்கப்பட்ட வைப்பு மீதிகள் நடைமுறைச் சொத்துக்களாக வகைப்படுத்தப்பட்டிருந்தன. | 2020 ஆம் ஆண்டு முதல் இந்த வழங்கல் சேவைகள் வைப்பு நடைமுறை அல்லாச் சொத்துக்களாக வகைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 இன் 65 ஆவது பந்தியின் பிரகாரம் நடைமுறை அல்லாச் சொத்துக்களின் பயன்மிக்க ஆயுட்காலத்தை வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக முழுமையாக பெறுமானத் தேய்விற்கு உட்படுத்தப்பட்டிருந்த செலவினம் ரூ.259,173,247 பெறுமதியான நடைமுறை அல்லாச் சொத்துக்கள் தொடர்ந்தும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அவ்வாறாயினும், அந்த மதிப்பீடு செய்யப்பட்ட தவறு இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இதற்குத் தேவையான நடவடிக்கைகள் தொடர்பாக எதிர்வரும் காலங்களில் கவனம் செலுத்துவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் 19 இன் 61 ஆவது பந்தியின் பிரகாரம் சேவைக்கு பிற்பட்ட நன்மைகளை | பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 05/2019 சுற்றறிக்கையின் பிரகாரம் பணிக் கொடை ஒதுக்கீடுகள் சரியாக கணிப்பிடப்பட்டுள்ளதுடன் | கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் |

| | | |
|---|---|---|
| கணிப்பிடும் போது ஆயுட் காலத்தினை தொழில்நுட்ப முறையினைப் பயன்படுத்தி நம்பகத் தன்மையான மதிப்பீடு ஒன்றினை மேற்கொள்ள வேண்டியுள்ள போதிலும் அதற்கு மாறான விதத்தில் நிறுவனத்தினால் ஊழியர்கள் இறுதியாக பெற்றுக் கொண்ட சம்பளம் மற்றும் சேவைக் காலம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு பணிக் கொடை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே, நிறுவனத்தினால் பணிக் கொடை கணிப்பிடுவதற்காக பின்பற்றியிருந்த மேற்படி கொள்கைக்கு ஏற்பவும் பணிக்கொடையானது சரியாக கணிப்பிடப்படாது இருந்தமையால் மீளாய்வு ஆண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பணிக் கொடை ஒதுக்கக் கணக்கின் மீதியானது ரூ. 15,555,439 பெறுமதியான தொகையினால் குறைவாகவும் மற்றும் நிதி செயலாற்றுகை கூற்றிலே பணிக் கொடை செலவினமானது ரூ. 10,141,760 குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | கணக்காய்வு விசாரணைகளில் குறிப்பிடப்பட்டவாறு 2020 ஆம் ஆண்டின் சனவரி 01 ஆம் திகதியன்று இச்சீராக்கத்தை சரிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | சரியாக கணிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.6 வருமதி மற்றும் சென்மதி கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

### 1.6.1 முற்பணம்

| கணக்காய்வு விசாரணைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) முற்பணம் வழங்கும் போது உரிய முறையில் பொருள்கோடல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளின் மீது முற்பணம் செலுத்த வேண்டியுள்ள போதிலும் 41 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த மொத்தக் கூட்டுத்தொகை ரூ.931,700 பெறுமதியான முற்பணங்கள் 05 நாட்கள் முதல் 157 நாட்கள் வரையிலான காலத்தின் பின்னர் நூற்றிற்கு 100 | அனைத்து முற்பணங்களும் கூட்டங்களுக்காக வழங்கப்பட்டுள்ளதுடன் கூட்டங்களுக்காக உண்மையாகவே பங்கேற்ற தொகையினர் மதிப்பீடு செய்யப்பட்ட அங்கத்தவர் தொகையை விடவும் குறைந்த சந்தர்ப்பங்களின் போது இவ்வாறான தன்மைகளுக்கு முகங் கொடுக்க வேண்டி ஏற்படுகின்றது. முற்பணத்தை தீர்க்கும் பணியினை தாமதமின்றி மேற்கொள்வதற்காக உள்ளக அறிவித்தல் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. | சரியான செலவின மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு முற்பணம் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| சதவீதத்தினால் தீர்க்கப்பட்டிருந்தது. மேலும், 102 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூ.3,185,755 பெறுமதியான முற்பணத் தொகைகளில் மொத்தம் ரூ.1,223,370 பெறுமதியான தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. | | | |
| (ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் நிலவி வருகின்ற சுகாதார அமைச்சிடமிருந்து அறவிடப்பட வேண்டியுள்ள ரூ.915,750 பெறுமதியான பாடநெறி வருமானம் மற்றும் 2015, 2016 ஆண்டுகளுக்குரிய அறவிட வேண்டியுள்ள ரூ.1,681,625 பெறுமதியான கட்டிட வாடகை மீளாய்வு ஆண்டின் இறுதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சுகாதார அமைச்சிற்கு நினைவூட்டல் பல முறைகள் மேற்கொண்ட போதிலும் உரிய பதில் ஏதும் இதுவரையில் கிடைக்கப் பெறாமையினால் இது தொடர்பாக உரிய தீர்மானம் எடுப்பதற்கு நிறுவனத்தின் முகாமைத்துவ சபைக்கு அறிவித்து ஆலோசனை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | உரிய வருமானத்தை இயன்றளவு விரைவில் அறவிட்டுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். | |

## 1.7 சட்டங்கள், ஒழுங்குவிதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், ஒழுங்கு விதிகள், பிரமாணங்கள் என்பன | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகள் கோவையின் நிதி ஒழுங்கு விதிகள் 371 | மீளாய்வு ஆண்டு காலப் பகுதியினுள் பதவி நிலை அல்லாத அலுவலர்களுக்கு 931 சந்தர்ப்பங்களின் போது முற்பணம் பெற்றுக் கொடுத்திருந்ததுடன், 52 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக் கொடுத்திருந்த கூட்டுத் தொகையான ரூ.2,979,285 பெறுமதியான முற்பணங்களைத் தீர்ப்பதற்காக 30 முதல் 285 நாட்கள் வரையிலான கால இடைவெளியொன்று எடுக்கப்பட்டிருந்தது. | மருத்துவ விஞ்ஞான பட்டப் பின் படிப்பு நிறுவனத்தின் சில பரீட்சைகள் பிரதான நிறுவனத்திற்கு வெளியே மருத்துவ பீடங்களிலும் போதனா வைத்தியசாலைகளிலும் நடாத்த வேண்டி ஏற்படுகின்றது. அவ்வாறான சந்தர்ப்பங்களின் போது முற்பணங்களை குறுகிய காலத்தில் தீர்க்க முடியாமல் போகின்றது. எவ்வாறாயினும் இக்காலப் பகுதியைக் | நிதி ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| **(ஆ)** **2016** மார்ச் 31 ஆம் திகதிய இலக்கம் **05/2016** உடைய அரச நிதி சுற்றறிக்கை | ஒவ்வொரு நிதி ஆண்டிலும் மார்ச் 17 ஆம் திகதிக்கு முன்னர் கடந்த ஆண்டிற்கான பொருட் கணக்கெடுப்பு பணிகளை முடிவுறுத்த வேண்டியுள்ள போதிலும் 2019 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பு பணிகள் 2020 யூலை 08 ஆம் திகதி வரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டுடன் தொடர்புடைய பொருட் கணக்கெடுப்பு அறிக்கை தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் 2020 மார்ச் 13 ஆம் திகதி முதல் சுமார் 03 மாத கால பகுதிக்கு அலுவலகம் மூடப்பட்டிருந்தமையால் அதனை பூர்த்தி செய்ய முடியாது போயுள்ளதுடன் 2020 யூலை மாதமாகும் போது இறுதி அறிக்கையினை பெற்றுத் தர முடியும் என குறிப்பிட விரும்புகின்றேன். | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) 1995 யூலை 14 ஆம் திகதிய இலக்கம் 636 உடைய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | பரீட்சைகளை நடாத்தி 03 மாதங்களுக்குள் பெறுபேறுகளை வெளியிட வேண்டியுள்ள போதிலும் நிறுவனத்தினால் 2019 ஆம் ஆண்டிலே நடாத்தியிருந்த பட்டப் படிப்பு பரீட்சைகள் 04 இற்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் 02 வாரங்கள் முதல் 06 மாதங்கள் வரையில் தாமதப்பட்டிருந்தன. | விடைத்தாள்களை திருத்துவதுடன் தொடர்புடைய வெளிநாட்டு மருத்துவர்களின் மதிப்பீட்டு தாமதம், பல்கலைக்கழக வேலை நிறுத்தம் மற்றும் ஒரு பாடநெறிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த மதிப்பீட்டு பணிகள் நிபுணத்துவ மருத்துவர்களின் வேலைப்பழு காரணமாக பெறுபேறுகளை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டமை இடம்பெற்றுள்ளது. | சுற்றறிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

## 2.1 நிதி பெறுபேறு

மீளாய்வு ஆண்டின் தொழிற்பாட்டு பெறுபேறு ரூ. 205,005,491 தொகை மிகை ஒன்றினை கொண்டிருந்ததுடன் அதற்கு மாறாக கடந்த ஆண்டின் மிகையானது ரூ. 53,726,287 ஆகும். அதன் பிரகாரம், நிதி பெறுபேறுகளில் ரூ.151,279,204 பெறுமதியான விருத்தி ஒன்றினை

அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்விருத்திக்கு அரச கொடைகள் மற்றும் உழைத்துக் கொண்ட வருமானம் என்பவற்றின் விருத்தியானது பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. தொழிற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொழிற்பாட்டு வினைத்திறன் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 2020 பெப்ரவரி 14 ஆம் திகதியன்று ரூ.582,894 பெறுமதியான 10 கையிருப்பு வகைகள் கொள்வனவு செய்யப்பட்டு 11 மாதங்கள் முதல் 05 வருடங்கள் வரையில் காலம் கடந்திருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் தேவையற்றவாறு பொருட்கள் கொள்வனவு செய்து தேக்கி வைத்திருந்தமையை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. | விசாரணைக்கு இணக்கம் தெரிவிக்கின்றேன். சில பொருட்கள் சந்தையில் தட்டுப்பாடான சந்தர்ப்பங்களின் போது மற்றும் பொருட்கள் கிடைப்பதற்கு தாமதமான சந்தர்ப்பங்களின் போது இவ்வாறு ஏற்பட்டுள்ளது. எனினும், இதன் பின்னர் இவ்வாறான நிலைகளை குறைத்துக் கொள்ளுமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | வினைத்திறனான முறையில் கொள்வனவு செய்வதற்கான முறைமை ஒன்றினை செயற்படுத்தல் வேண்டும். |
| (ஆ) 2018 பொருள் கணக்கெடுப்பு அறிக்கையின் பிரகாரம் 09 வகையான பொருட்களின் 27 அலகுகள் மிகை ஒன்று மற்றும் 25 வகையான பொருட்களின் 36 அலகுகள் குறைபாடு ஒன்று காணப்பட்டதுடன் கணக்காய்வு தினமான 2020 யூன் 15 ஆம் திகதி வரையில் அந்த மிகை மற்றும் குறைபாடு தொடர்பில் எதுவித நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை. | 2018 பொருள் கணக்கெடுப்பு அறிக்கையுடன் தொடர்புடைய விடயங்களில் சில பொருட்கள் உரிய இடத்தில் இருக்காமை, சில பொருட்கள் மிகையாகவோ அல்லது குறையாகவோ இல்லாததுடன் மேலும் சில பொருட்கள் உடைந்துள்ளன. | சீராக்க நடவடிக்கைகளை காலத்திற்கு காலம் மேற்கொள்ளல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு தன்மை மற்றும் நல்லாட்சி

### 4.1 வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பெறுகை வரவு செலவுத் திட்டம் மற்றும் வருடாந்த வரவு செலவுத் திட்டம் ஆகிய ஆவணங்களுக்கு இடையே தொடர்பொன்று காணப்படாமையினால் நிலையான | வரவு செலவுத் திட்ட ஆவணத்தில் நிலையான சொத்துக்களை கொள்வனவு செய்வதற்காக மதிப்பீடு செய்யப்படுவது பொதுத் திறைசேரியிடமிருந்து கிடைக்கப் | சரியான வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு ஒன்றினை பேணி வருவதற்கு |

சொத்துக்களை கொள்வனவு செய்வதற்கும் மற்றும் ஒப்பந்த பணிகளுக்காக வருடாந்த வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் மற்றும் பெறுகை வரவு செலவுத்திட்ட ஆவணத்தில் ஒதுக்கப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளுக்கு இடையே ரூ.616 மில்லியன் பெறுமதியான மாற்றம் ஒன்றினை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

பெறுகின்ற நிதி ஏற்பாடுகளுக்கு மாத்திரமாக அமைந்துள்ளமை அதற்கான காரணமாகும்.

நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.